உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௮] யாழ்ப்பாணம்—வியஞு ஐப்பசிமீ சுஉ (1946 அக்டோபர் 22 செவ்வாய்க்கிழமை) [இல ௫௫

# ஜெர்மனி - அதனுடைய எதிர்காலம்

எழுதியவர்: ஸ்ரீஜுத் தாரகநாத் தாஸ்
தொகுத்தவர்: ஸ்ரீதன்

ஜெர்மனி இன்று சின்னுபின்னப் படுத்தப்பட்டிருக்கிறது. இந்த உலகம் முன்னொருபோதும் கண்டும் கேட்டும் இராத மின்னல் வேகம் என வெற்றிக்குமேல் வெற்றியீட்டி, இந்த உலகத்தையே ஓர் கலக்குக் கலக்கிவைத்த ஜெர்மன் தளபதிகள் அதன் அரசியல்வாதிகள் யாவரும் அவமானப்படுத்தப்பட்டனர். காராக்கிருகத்தில் தள்ளப்பட்டனர். பலர் தூக்கிட்டுக் கொல்லப்பட்டனர். ஜெர்மனியின் கைத்தொழில்கள் யாவும் நாசமாக்கப்பட்டன. அந்த நாடே நாலு கூறாக்கப்பட்டு, அமெரிக்கா, பிரான்ஸ் இங்கிலாந்து, சோவியத் ருஷியா என்னும் நான்கு வல்லரசுகளும் அவற்றைப் பங்கு போட்டுக் கொண்டன. சுருங்கக் கூறுங்கால் இன்று ஜெர்மன் மக்கள் அல்லோல கல்லோல நிலைமையில் இருக்கின்றனர். செய்வதின்னதென்றறியாது ஏங்குகின்றனர். இப்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டதினால், இனி ஜெர்மனி தலைதூக்கமுடியுமா? அது மீண்டும் ஓர் வல்லரசாக முடியுமா? இந்தப் பிரச்சினை இப்போது உலக மக்கள் மனத்தை வெகுவாகப் பாதித்திருக்கிறது. ஜெர்மனி இனித் தலைதூக்காதபடி உலக வல்லரசுகள் நான்கும் இன்று கருமம் ஆற்றி அதனை நசுக்கி வைத்திருக்கின்றன. அவை கொண்டுள்ள நோக்கம் நிறைவேறுமா? அவை எண்ணியபடியே எல்லாம் நடக்குமா? ஒருவன் தன் மனத்தையே அடக்கமுடியாமல் இடர்ப்படுகையில், 6 கோடி மக்கள் மனத்தை அடிமைத்தனத்தில்எப்படிவைத்திருக்கமுடியும்?

"சிறையினிற் புகுத்திட் டாலும்
செய்மையிற் சேர்த்திட்டாலும்
பிறவிடம் சேர்த்திட் டாலும்
பெட்டியிற் பூட்டிட் டாலும்
மிருதசங் கிலியாற் கட்டி
இறுகவே பிணித்திட் டாலும்
பிறர்மனப் பற்றற நீக்கிப்
பேதித்தல் எலா தன்றோ."

ஜெர்மனியை அடக்கமுடியாது. அது மீண்டும் தன் தொன்மை நிலையை அடைந்தேதீரும். அதற்கான உற்பாதங்கள் இப்போதே தோன்றுகின்றன என்னும் இன்னோரன்னவற்றைப் பிரபல இந்திய அரசியல் ஆராய்ச்சியாளரான ஸ்ரீஜுத் தாரகநாததாஸ் அவர்கள் இக்கட்டுரையில் விளக்குகிறார்.

●

### நடந்தது என்ன ?

முதலாவது உலகமகாயுத்தம் முடிந்தது. ஜெர்மனி முறியடிக்கப்பட்டது. நிராயுதபாணியாக்கப்பட்டது. கப்பற்படை, வர்த்தகத்துக்கான கப்பற்படை யாவும் அது வைத்திருக்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அதனுடைய குடியேற்ற நாடுகள் யாவற்றையும் பறித்து, வெற்றியடைந்த நேசக் கட்சியினர் தமக்குள்ளே பங்குபோட்டனர் அதற்கு மூலப் பொருள்கள் கிடைக்காதபடி அதன் வளம்மிகுந்த ஸார் பிரதேசத்தைப் பறித்து பிரான்சிற்குக் கொடுத்தனர், அதன் கீழ்ப் பாகத்தைத் துண்டித்து, போலந்துக்குக் கொடுத்தனர். இப்படியெல்லாம் சின்னுபின்னப்படுத்திவிட்டபடியினால், இனியும் ஜெர்மனி தலைதூக்க முடியாது. உலக அரசியல் விவகாரங்களில் இனியும் பிரவேசிக்கமாட்டாது என்று வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையைச் சிருட்டிசெய்த உலக இராஜதந்திரிகள் உண்மையில் எண்ணினர். ஜெர்மனியைச் சரிவர நசுக்கி அதனை ஒருபோதும் தலைதூக்காமற் செய்வதற்காக வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையைத் தயாரித்த மேதாவிகள் அந்நாட்டின் தற்காப்பு, வெளிநாட்டு வியவகாரம், பொருளாதாரப் பிரச்சினைகள் என்பவற்றையும் தாமே பொறுப்பெடுத்து நிருவகித்தனர்: அவர்கள் தங்கள் நோக்கத்தை வெற்றிகரமாகப் பூர்த்தியாக்கச் சர்வதேச சங்கம் என்று ஓர் ஸ்தாபனத்தையும் நிறுவினர். பெயரளவில் இது சர்வதேச சங்கம் என்றாலும், அந்த யுத்தத்தில் வெற்றியடைந்த 5 வல்லரசுகளையும் அவற்றின் கட்டளைகட்கிணங்கத் தலையாட்டும் கைப்பொம்மைகளையுமே அது கொண்டதாகும்; வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை ஜெர்மனியோ, அதன் நேச நாடுகளோ மீறுமற் பார்த்துக்கொள்ள ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனமே சர்வதேச சங்கம் அன்றி, உண்மையில் உலக சமாதானத்தை நிலைநாட்ட ஏற்பட்டதல்ல.

●

### புதிய பிரச்சினைகள்

அக்காலத்து வல்லரசுகள் எண்ணியபடி எதுவும் நடக்கவில்லை. ஒட்டமன் என்னும் துருக்கிய ஏகாதிபத்தியம், ருஷியச் சக்கரவர்த்திகளின் ஏகாதிபத்தியம், ஆஸ்திரிய ஏகாதிபத்தியம், ஜெர்மன் சக்கராதிபத்தியம் என்பவற்றை முதலாவது மகாயுத்தம் சிதறடித்தது என்பது உண்மையே. ஆனால் பழையன கழிய புதுப்பிரச்சினைகள் பல தோன்றின. உலக அரசியலில் பல புதிய சிக்கல்கள் தோன்றின. ஒரு நாடோ பல நாடுகளோ ஒன்று சேர்ந்து மற்றும்நாடு அல்லது இன்னோர் கூட்டமான நாடுகளிலும் பார்க்க வலிமையடையாமல் இருக்கக் கருமம் ஆற்றும் கொள்கையையே ஐரோப்பிய வல்லரசுகள் கடைப்பிடித்து வந்தமை வழக்கம். இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, சோவியத் ருஷ்யா இவை நான்கும் தனித்தனி மிகவும் பராக்கிரமம் படைத்து வந்தன. இவை ஒவ்வொன்றும் தனித்தனி மாறுபட்டுக் கருமமாற்றத் தலைப்பட்டன; இந்த வல்லரசுகள் இப்படித் தனித்தனி மாறுபட்டுப் பராக்கிரமம் படைக்க, இவை ஒவ்வொன்றும் தமக்குத்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## தீபாவலி

நாளைத் தீபாவலி: அதர்மத்தைக் கெடுத்துத் தர்மத்தை நிலைநாட்டிய நாள் அது. அடிமையிருளை ஓட்டிச் சுதந்திரதீபத்தை எங்கள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, நாட்டி உலகத்தை உய்வித்த நாள். அதனைத் தமிழ்நாட்டின் தவப்புதல்வன், கர்மயோகி, தித்திக்கும் செந்தமிழை அள்ளிப்பொழியும் அருட்கவிஞன், எங்கள் சுத்தானந்தபாரதி தமக்கேஇயல்பாயுள்ள தீந்தமிழ்ப் பாக்களால் விளக்குகிறார்:

அன்பெனும் கங்கையில் ஆடுவோம்—நல்
அழகுக் கலைகளைச் சூடுவோம்
இன்பமாய் எல்லாரும் கூடுவோம்—வாரீர்
இன்னிசைக் கீதங்கள் பாடுவோம்

எங்கும் அறவொளி யேற்றுவோம்—ஜக
தீசனை நெஞ்சரப் போற்றுவோம்
நங்குலச் சோதி பொலிகவே—நம்
நாட்டிருள் ஓடி நலிகவே!

வறுமை யரக்கனைக் கோல்லுவோம்—ஞான
வாளால் மடமையை வெல்லுவோம்
வெறுமொழி பேசுவோர் யாரினி?—நல்ல
வீரருக் கேயிந்தப் பாரிசை

ஆயிரம், ஆயிரம் ராக்ஷஸர்—மண்ணை
ஆகாயக் குண்டால் அழிக்கின்றார்
சாய்ந்திவர், தர்மம் செழிக்கவே—இன்று
சக்திக் கனலைப் பெருக்குவோம்.

# வீராங்கனை விஜயம்

## நிறத்திமிர் அடக்கப் போகும் விஜயலக்ஷ்மி

தென்னாபிரிக்கா இப்போது வெள்ளையர் நாடாகிவிட்டது. ஒரு நூற்றாண்டுக்கு முன் அங்கு குடியேறிய ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் ஏனைய ஐரோப்பியரும் அங்கு ஒன்றுசேர்ந்து அப் பெரிய நாட்டைத் தாக்கி, அங்குப் பூர்வ குடிகளாகவிருந்த நீகிரோவர்களுக்குக் "கல்தா"க் கொடுத்துவிட்டார்கள், அந்த நீகிரோவர்கள் இன்று தங்கள் சொந்த நாட்டிலே அடிமைகளாக விருக்கிறார்கள். நிற்க,

தென் ஆபிரிக்காவிற் குடியேறிய வெள்ளையர், கரும்புத்தோட்டம் முதலாம் தங்கள் விவசாயத் தோட்டங்களுக்கு இந்தியமக்களை (ஆசை வார்த்தை கூறி) அழைப்பித்து அவர்களுடைய உழைப்பால், அத்தேசத்தைப் பொன்கொழிக்கும் நாடாக்கிவிட்டனர். தங்கள் கருமத்தைச் சரிவர நிறைவேற்றிக்கொண்டு, தாமும் ஓர் வல்லரசுச் சாதியார் என்று நிமிர்ந்து நிற்கும் தென் ஆபிரிக்கா வெள்ளையர் இன்று தம் நாட்டை இந்நிலைக்குக் கொண்டுவந்த இந்தியர்க்கு என்ன என்ன அநீதிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம்சம்பூர்ணமாகச் செய்து வருகிறார்கள். தென்னாபிரிக்காப் பிரதமர் ஸ்மட்ஸ் என்பவர் பழுத்த ஏகாதிபத்திய வாதி; அதிகார வெறிபிடித்தவர்; வெள்ளைத் தோல் பூண்டவர்களே அகிலத்தை ஆள உரிமையுடையவர்கள்; கறுப்பர்கள் அடிமைகளாய் இருக்கவேண்டும் என்ற கலியுக ஞானத்தைக் கடைப்பிடிக்கும் மேதாவி; இக் மகானுபவர், இந்தியமக்களுக்கு நீதி வழங்க மறுக்கின்றார். எனவே, இந்தியா இப்போது தென்னாபிரிக்காவுடன் தனது உறவுகளைத் துண்டித்துவிட்டது. அங்கு வாழும் இந்திய மக்கள் வீரத்துடன் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆற்றிவருகிறார்கள்,

இப்போது இந்தப் பிரச்சினை ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்துக்கு விடப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தாபனத்தின் கூட்டம் இன்னும் சிலதினங்களில் அமெரிக்க நியூயோர்க் நகரத்திற் கூடவிருக்கிறது. இந்தியா தனது பிரதிநிதிகளாகப் பொம்மைகளையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் காலாற் பணியிடத் தலையாற் சுமந்து செய்யும் தாஸர்களையும் இப்போது அனுப்பவில்லை. வீரன் நேரு பாரத நாட்டுப் பிரதமராக வந்ததும், இந்தியாவுக்கு இப்போது உலகெங்கும் ஓர் தனி மதிப்பும் அந்தஸ்தும் ஏற்பட்டிருக்கின்றன. உலக அரசியல் அரங்கத்திலே பாரதநாட்டின் நிலை என்னாகும் என்று உலகத்து இராசதந்திரிகள் இந்தியாவை நோக்கிய வண்ணமாக நிற்கின்றனர். இப்படியான ஓர் நிலைமையிலே ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் நியுயோர்க் நகரிற் கூடப்போகிறது.

இந்த ஸ்தாபனக் கூட்டத்துக்கு மானமது நீங்கில் கவரிமான் அனைய நீரார் என்றுங்குள்ள வீரசிகாமணிகள்தான் இந்தியாவின் மானத்தைக் காக்கும் பிரதிநிதிகளாகச் செல்லுகின்றனர் அவர்களுக்கெல்லாம் தலைவியாகப் பண்டிதர் நேருவின் சகோதரி விஜயலக்ஷ்மி என்னும் வீராங்கனை செல்கின்றார். இந்தியப் பிரதிநிதிகளாகப் பின்வருவோர் செல்கிறார்கள்:

தொடர்ச்சி 6ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழக தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியவருஷ
ஐப்பசிமீ கூஉ செவ்வாய்க்கிழமை

## தீபாவலித் திண்டாட்டம்

இந்த நாட்டிலே சைவமக்களென்றிருப்பவர்களுள், கல்வியறிவொழுக்கங்களோடு கூடியவர்களும் தெய்வபத்தி யுடையவர்களும் தீபாவலித் தினத்தைச் சமயசம்பந்தமான தூயமுறையிற் கழிப்பார்கள்; இவர்களுட் செல்வர்களா யுள்ளவர்கள் தம் சுற்றத்தார் அயலாருள் ஏழைகளிருந்தால் அவர்களுக்கும் உடுக்குந் துணி முதலியன வாங்கி யுதவுதலாகிய வஸ்திரதானத்தையுஞ்செய்வார்கள்; ஒருசாரார் எண்ணெயிட்டு முழுகுதல், முழுகிக் கோடியுடுத்தல் என்னுமிவைகளை முறைப்படி செய்துவிட்டு, அதன்பின் இந்நாளை உண்டாட்டுக் களியாட்டுத் தினமாகக் களிப்பர்.

உலக இரண்டாம் யுத்தம் தொடங்கிய நாள் தொட்டு இத்தீபாவலிக் கொண்டாட்டம், தொன்மைபோல் ஆடம்பரமின்றித் தேய்ந்து தேய்ந்து வரலாயிற்று; ஆனாலும், இதுகாறும் கொண்டாட்டமாகத்தான் நடந்தது. நாளைக்குத் தீபாவலிக் கொண்டாட்ட தினமாகும்; ஆனால் நாளைத்தினம் தீபாவலிக் கொண்டாட்ட தினமாக நடத்தலின்றி, இங்குள்ள மக்களுட் பெரும்பாலார்க்கு, அதாவது ஏழைமக்களுக்குப் பெருந் திண்டாட்ட தினமாகவே நேரவிருக்கின்றது; சென்ற ஆண்டில் நிகழ்ந்த வண்ணம் கடைசி நேரத்திலாயினும் மூன்றும் அயனத்திற்குரிய புடைவைக்கூப்பன் வழங்கப்படும், அவற்றைக் கொண்டு தீபாவலிக்காலத்திலே புடைவை வாங்கிக் கொள்ளலாமென்ற நம்பிக்கையினால், பலர் இரண்டாம் அயனத்திற்குரிய கூப்பனைக் கொடுத்துப் புடைவையைவாங்கி விட்டார்கள்; இப்பொழுது மூன்றும் அயனத்திற்குரிய கூப்பன் வழங்கப்படாமையினால், எத்தனையோ ஏழை மக்கள் தீபாவலி கொண்டாடாவிட்டாலும், மாறிக் கட்டத் துணியின்றிக் கஷ்டப் படுகிறார்கள்; புடைவைக் கட்டுப் பாட்டதிகாரிகள், சனப்பிரதிநிதிகளிடம் 'மூன்றும் அயனக் கூப்பன்கள் ஏன் விடப்படவில்லை' என்று ஆவலோடு வினவினால், போதிய புடைவை இருப்பிலில்லாமையினாலே, மனஸ்தாபம் பிணககு என்னுமிவைகள் உண்டாகுமென்றஞ்சி மூன்றும் அயனக் கூப்பன்கள் வழங்கப் படவில்லையென்கிறார்கள்; அவர்கள் சொல்லும் நியாயமும் சரிதான்; கடையிற் புடைவையில்லாமற் புடைவைக் கூப்பனை வெளியிடுவதனால் ஆவதென்ன?

ஆனால் அரசினரைத் தெய்வங்கள் என்று மூடத்தனமாக நம்பியிருக்கும் பாமர சனங்கள், பிரசைகளின் உயிரை உடம்போடு வைத்துக் காப்பதற்கு உணவையும், மானத்தைக் காப்பதற்குத் துணியையும் எங்கள் அரசினர் இந்தியாவிலிருந்தேனும் ஏனைய நாடுகளிலிருந்தேனும் மூந்தியே வருவித்து எங்களுக்குத் தரவேண்டும்; அப்படிச் செய்வது அதிகாரத் தெய்வங்கள் தாமே யென்று நியாயம்பேசுகிறார்கள்; "இந்தியாவையொழிந்த அந்நிய நாடுகளிலிருந்து காலத்திற்கேற்றபடி விரைவாகப் புடைவை துணி வருமெனக் காத்திருக்க வொண்ணாது; இந்திய அரசினர் இலங்கை மக்களிடத்தில் இரக்கங் கொண்டால் உதவிசெய்தல் முடியுந்தான்; ஆனால் இலங்கை இந்தியரை உருளிவெளித்தோட்டம் போன்ற தேயிலை றபர்த் தோட்டங்களிலிருந்து துரத்தும்போது, துரத்தவும் போகாதவர்களைச் சிறை வைக்கும்போது, தன் மக்களைப் புறக்கணிக்கும் இலங்கை யதிகாரிகளுக்குப் பாரதமாதா புடைவையல்ல நூல் தானுங் கொடுப்பாளா" என்று பாமரமக்களல்லாதவர்கள் எதிர் நியாயம் பேசுகிறார்கள்.

இவை இங்ஙனமாக, பட்டகாலே படுங் கெட்டகுடியே கெடுமென்றாங்கு, புகைரதப்பகுதித் தொழிலாளர் செய்த வேலை நிறுத்துதல் காரணமாக, இந்த யாழ்ப்பாணத்திற்குந் தலைநகராகிய கொழும்பிற்குமிடையே சில தினங்களாகப் புகைரதப் போக்குவரத்து அறவே இல்லாதொழிய, இதனால் அங்கிருந்து வர வேண்டிய உணவுப் பொருள்கள் புடைவை, கடிதமார்க்கமாக வர வேண்டிய பணம், இங்குள்ள மனைவி மக்கள் நெருங்கிய சுற்றத்தார்க்கு, கொழும்பு கண்டி முதலாம் ஏனைய நகரங்களிலிருந்து ஆங்காங்குள்ள உத்தியோகம் பார்ப்பவர்களும் வேறு முயற்சிகள் பார்ப்பவர்களும் தீபாவலிக் கொண்டாட்டத்திற்கென அனுப்பும் சேலை துணிகள் யாதும் இங்கு வராதொழிந்தன; புகைரதப் போக்குவரவு தடைப்பட்டதனிமித்தம், நேற்றுத்தொடக்கம் கட்டுப்பாட்டு உணவுப் பொருள்கள் ஒருபடியரிசி, ½ றாத்தலுக்குப்பதிலாகக் ¼ றாத்தல் சீனி விகிதந்தான் வழங்கப்படலாயிற்று; கோதுமை மா கொடுக்கப்படாமையினால் இங்குள்ளமக்கள் இந்தத் தீபாவலி வாரத்திற் பசியினால் திண்டாடுகிறார்கள்; சங்கடம் இவ்வளவில் நின்றுவிடவில்லை; இப் பட்டினத்திற்கு வெளிச்சமூதவும் யந்திரத்தில் ஏதோ உடைவு நேர்ந்துவிட்டபடியால் பட்டினத்திலுள்ள தெருவீதிகளும் இல்லங்களும் இராக்காலத்தில் கிருஷ்ணபட்சத்து இருட்டோடு கூடியனவாகவே காணப்படுகின்றன; இவ்வளவில் மாத்திரம் தீமை நின்றுவிடவில்லை; இந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஆண்பாலார் பெண்பாலாருட் பெரும்பாலார் உபாத்திமைத் தொழில் பார்ப்பவர்கள்; இந்த உபாத்தியாயர்களுக்கு இந்த அக்டோபர்மாசம் பத்தாந் தேதிக்கிடையிற் கிடைத்திருக்க வேண்டிய செப்டம்பர்மாச வேதனம், இன்று 22ம் தேதியாகியும் இன்னமுங் கிடைத்தபாடில்லை; இதனால், பணச் செலவிற்கேதுவாகிய தீபாவலிக் காலத்தில் இவர்களும் இவர்களைப்பொறுத்திருக்குங் குடும்பங்களும் படுங் கஷ்டஞ் சற்றல்ல; இன்னும் இந்தத் தீபாவலிநேரத்தில் இங்குள்ள மக்களுக்கு நேர்ந்துள்ள இடைஞ்சலும் சிரமமும் பல; அவற்றை யெடுத்துச் சொல்வதனால் ஆம்பயன் யாதுமில்லையெனலாம்; இந்தக் காரணத்தினாலேயே நாளைக்கு நிகழவிருக்குந் தீபாவலிக் கொண்டாட்டத்தைத் திண்டாட்ட மென்கின்றேம்.

ஆனாலும் கட்டுப்பாட்டதிகாரிகள், 6 கூப்பன் கொடுத்து வாங்கிய நாற்பதாம் இலக்கத்திற்குக் கீழ்ப்பட்ட சேலைகளை இந்த நேரத்தில் இரண்டு கூப்பன் கொடுத்து வாங்குதற்காகிய ஒழுங்குகளைச் செய்திருக்கிறார்கள்; இது தீமைக்கிடையிற் பிறந்த ஒரு நன்மையாகும். இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளிவரும் புடைவைக் கட்டுப்பாட்டுவிஷயமான கடிதத்தை மேற்படி கட்டுப்பாட்டதிகாரிகளும் அரசாங்கசபை அங்கத்தவர் மந்திரிமார் முதலாம் இலங்கையரசியற் பொறுப்பாளர்களும் படிப்பார்களாக.

# வேலைநிறுத்தச் செய்தி

## உணவுக் கப்பல்கள் திரும்பின

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு ஏறக்குறைய 6000 தொன் பர்மா அரிசியுடன் வந்த ஜலபுத்திரா என்ற கப்பல் தான் கொண்டுவந்த அரிசியை இறக்காமலே போய்விட்டது. இப்படி 12 உணவுக் கப்பல்கள் தம் பொருள்களை இறக்காமற் சென்றுவிட்டன என்று இப்போது தெரிகிறது. இன்னும் இந்த மாசத்தில் இங்கே வரவிருந்த கப்பல்களையும் இங்கேவரவேண்டாமென்று கொழும்பில் உள்ள அநேகம் கப்பற்கம்பனிகள் அறிவித்துவிட்டன. கப்பல்களுக்குநிலக்கரி, ஜலம் ஆகியவற்றுக்காசக் கொழும்பை நம்பி வரவேண்டாமென்றுஅவசரத் தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

## தேசாதிபதியின்வேண்டுகோள்

கொழும்பு ரேடியோ மூலம் இலங்கைத் தேசாதிபதி பொதுஜனங்களுக்குச் சென்ற சனிக்கிழமை இரவு ஓர் வேண்டுகோள்விடுத்தார், இப்போது இலங்கையிலே நேர்ந்துள்ள வேலை நிறுத்தம் காரணமாகப் பொதுஜனங்களே அதிகம் கெடுதிப்படுவதைத் தாம் விசனிப்பதாகவும், இலங்கையில் உணவுக் கஷ்டநிலை இப்படியாக இருக்கையில் வேலைநிறுத்தக்காரரின் செயல்விரும்பத்தக்கதல்லவென்றும், இந்த நெருக்கடியான சமயத்தில் அரசாங்கம் தன்னாலான முயற்சிகள் யாவற்றையும் செய்யும் என்றும் அதனுடன் பொதுஜனங்கள் யாவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் வேண்டிக்கொண்டனர்.

## மந்திராலோசனை

நுவரெலியாவிலிருந்து தேசாதிபதியவர்கள் சென்ற சனிச்சிழமை கொழும்புக்குத் திரும்பி இலங்கை மந்திரிகள் சபையுடன் 4 மணி நேரமாகச் சம்பாஷித்தார். வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைபற்றி விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## வேலைநிறுத்தம் பரவுகிறது

வேலைநிறுத்தம் வெகுவாகப் பரவுகிறது. துறைமுகத் தொழிலாளர், கொழும்பு நகரசுத்தித் தொழிலாளர் கொழும்பு தந்திப்பகுதித் தொழிலாளர். எல்லாமாகச்சேர்ந்துஇப்போது 30000 போ வேலைநிறுத்தம் செய்கிறார்கள் என்று ஓர்செய்தி கூறுகிறது.

## இராணுவக் காவல்

கொழும்பிலும் ஏனைய சிலபிரதான நகரங்களிலும் உள்ள முக்கிய இடங்களிலே ராணுவத்தைக் காவல்வைக்க அரசாங்கம் இப்போது நிச்சயித்திருக்கிறது.

## அநுராசபுர விபத்து

அநுராசபுரத்தில் நிகழ்ந்த கோரமான புகைரத விபத்துச் சம்பந்தமாக விசாரணை சென்ற வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நிகழ்ந்தன. ரத்மலானைத் தொழிற்சாலையில் வேலை செய்த நாலுபேர் சந்தேகத்தின்மீது சிறையாக்கப்பட்டிருக்கிறார்கள்.

## யாழ்ப்பாணத்தில் மா இல்லை

யாழ்ப்பாணத்தில் இந்தக் கிழமை மாக் கொடுபடமாட்டாது. ஆள் ஒன்றுக்கு ஒருபடி அரிசி மாத்திரமே கொடுக்கப்படும், சீனி விநியோக அளவும் கால் இறாத்தலாகக் குறைக்கப்பட்டுள்ளது. சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் வழக்கப்படி உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. ஆனால், பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமையை உத்தேசித்து, மாவைக் கொடுக்கவேண்டாமென்று கட்டளை பிறப்பித்ததாகத் தெரிகிறது.

## பெற்றோலும் இல்லை

கொழும்பிலிருந்து பெற்றோல் வராதபடியினால், இங்கே பஸ் போக்குவரத்துக் கூடிய சீக்கிரத்தில் ஸ்தம்பித்துவிடுமோ என்று அஞ்சப்படுகிறது. இருக்கிற பெற்றோலைக்கொண்டு கூடிய அளவுக்குச் சரிப்படுத்துமாறு அதிகாரிகள் பஸ் கம்பனிகளுக்கு அறிவித்திருக்கின்றனர்.

## இன்று காலை புகைரதம் புறப்பட்டது

இன்றுகாலை யாழ்ப்பாணம் புகைரத ஸ்தானத்திலிருந்து ஒன்பதே முக்கால் மணிக்கு ஓர் புகைரதம் புறப்பட்டது. இது அநுராதபுரத்துக்கப்பாற் போகமாட்டாது. கொழும்புப் பிரயாணிகளையும் சாமான்களையும் இன்னோர் புகைரதம் அநுராதபுரத்திலிருந்து ஏற்றிச்செல்லும்.

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம் "சென்ட்ரல்" பஸ் கம்பனியிற் பரிசோதகராக விருந்த முத்துவேலு நடராசா என்பவரைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொலைசெய்தார் என்று கொக்குவிலைச் சேர்ந்த வல்லிபுரம் சேனாதிராசா என்பவர் சென்றவாரம் யாழ்ப்பாணம சுப்பிறீம் கோட்டிற் குற்றம் சாட்டப்பட்டார். இந்தவழக்கு நாலு நாட்களாக விசாரணை செய்யப்பட்டது. சென்ற வெள்ளிக்கிழமை விசாரணை முடிவில் "ஜூரி"மாரின் அபிப்பிராயப்படி, நீதியரசர் எதிரியை நிரபராதியெனக் கண்டு விடுதலை செய்தார். எதிரிக்காக நியாயவாதி ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஏற்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகைரத தொழிலாளர்

## வேலை நிறுத்தக் காரணம்

இலங்கையில் புகைரதப் பகுதியில் நாட் சம்பளம் பெறும் வேலைக்காரரில் 13,000 பேர்வரை வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர் என்று அறியலானோம். இதன் பயனுகப் பல புகைரதங்கள் போக்குவரத்துச்செய்யாமல் தடைப்பட்டன.

வேலைநிறுத்தம் சென்ற புதன்கிழமை மத்தியானத்துடன் ஆரம்பமாயது. எவ்விதமான முன் அறிவித்தலும் கொடுக்காமல், வேலைக்காரர் வேலைநிறுத்தம் செய்து விட்டனர் என்று புகைரதப்பகுதி அதிகாரியான மிஸ்ரர் பொட்ஜர்என்பவர் கூறுகிறுர். ஆனல் சென்றமாதம் 15-ம் திகதியே தங்கள் குறைகளையெல்லாம் பிரதம காரியதரிசிக்கு எழுதி, அக்குறைகளை நிவிர்த்திசெய்யாத பட்சத்தில் தாம் வேலைநிறுத்தம் செய்துவிடுவதென்று அறிவித்து விட்டதாகவும், ஒருமாத காலமாயம், தம் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யவும் இல்லை. தாம் எழுதிய மனுவுக்கு மறுமொழியும் இல்லை. எனவே தாம் தம் கடைசி ஆயுதமாகிய வேலைநிறுத்தத்தைக் கடைப்பிடித்து விட்டதாகவும் குறித்த தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

தொழிலாளர்களின் நிபந்தனைகள் வருமாறு:—

1. இப்போது கொடுக்கப்படும் வேதனத்தில் 100க்கு 75விகித வேதன உயர்ச்சி அளிக்கவேண்டும்.
2. தொழிலாளர்களும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்க்குக் கொடுக்கப்படுவதுபோல வீட்டு வாடகைப் பணம் கொடுக்கவேண்டும்; அல்லது இலவச விடுதி தரவேண்டும்.
3. எவ்விதமான நிபந்தனையும் விதிக்காமல் வருஷத்திலே குறித்த தொகை நாட்கள் "லீவு" தரல்வேண்டும்.
4. சம்பளத்துடன் யுத்தகால உதவிப் பணமும் தருதல் வேண்டும்.
5. 1942ம் ஆண்டிலே ஜப்பானியத் தாக்குதலின்போது வேலை நீக்கப்பட்டதொழிலாளரைப் பழையபடி வேலைக்கு நியமிக்கவேண்டும்:
6. ஓர் தொழிலாளிக்குக் குறைந்த பட்சம் தினம் ஒன்றுக்கு ரூ 2-50 சதம் வேதனம் உதவவேண்டும்.
7. தொழிலாளர்க்கு மத்தியானப் போசனம் இலவசமாக உதவல் வேண்டும்.
8. பகிரங்க விடுதலை நாட்களில் சம்பளத்துடன் விடுமுறைபுதவவேண்டும்.
9. 10வருஷம் தொடர்ச்சியாக வேலை செய்யும் தொழிலாளர் நிரந்தர வேலைக்காரர் என மதிக்கப்படவேண்டும்.
10. 25 வருஷம் தொடர்ச்சியான சேவை செய்யும் தொழிலாளர்க்குப் பென்ஷன்கொடுக்கவேண்டும்,
11. அரசியல் விவகாரங்களில் ஈடுபடுதற்குத் தொழிலாளர்க்கு உரிமைகள் அளிக்கப்படுதல்வேண்டும்.
12. தொழிலாளர் நோயுற்ற காலத்திலே 8 நாள் முழுச் சம்பள லீவு உதவப்படல் வேண்டும்.
13. சென்ற மார்ச் நவம்பர் மாதங்களில் வேலை நிறுத்தம்செய்த தொழிலாளர்களுக்குரிய சம்பளங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.
14. ஓர் தொழிலாளி பென்ஷன் பெறும்வரை, அவனை வேலையினின்றும் நீக்கவொண்ணுது.
15. தொழிலாளர்க்கென ஓர் பத்திரிகை வைத்து நடத்த இந்தத் தொழிலாளர் சங்கத்துக்கு அநுமதியளித்தல் வேண்டும்
16. அரசாங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்க்குரிய சங்கங்கள் முத்திரையின்றிக் கடிதங்கள் அனுப்பவும், தந்திகள் அனுப்பவும் வசதி இருக்கவேண்டும்.
17. கொழும்பு ஒலிபரப்பு நிலையத்திலிருந்து செய்திகள் பரப்புதற்குத் தொழிலாளர்க்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் அநுமதி கொடுத்தல்வேண்டும்.
18. சோல்பெரி அரசியற்றிட்டத்தை அரசாங்கத் தொழிலாளர் சங்கம் நிராகரிக்க வேண்டும்.

புகைரதந் தொழிலாளர் விதித்துள்ள 31 நிபந்தனைகளில் மேலே காட்டியவை பிரதானமானவையாகும்.

# ஜெர்மனி அதனுடைய எதிர்காலம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

துணைபாக இன்னொரு5-வதுநாட்டின் துணையைஎதிர்பார்த்தன. ஐரோப்பாவிலே பிரிட்டிஷார்க்கும் பிரான்சியருக்கும் போட்டி பலமாயது. இருபக்கமும் சமபலத்துடன் இருந்தன. எனவே அவை ஒவ்வொன்றும் இன்னொரு நாட்டின் உறவியைப் பெற்ருலேஎன்று அங்கலாய்த்து நின்றன. ஜெர்மனிதான் அதற்கு வசதியாக இருந்தது இப்படியான ஓர் நிலைமையில், ஜெர்மனி பலங் கொண்டிருந்தால் அதன் ஆதரவைத் தாம் பெறலாமே என்று ஐரோப்பிய வல்லரசுகள் தனித்தனி எண்ணின இதனை ஜெர்மன் அரசியல் ஞானிகள் அவதானித்தனர், சமய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர். காற்றுள்ளபோதே தூற்றிக்கொண்டனர்.

●

### வெர்ஸெயில்ஸ் சின்னுபின்னம்

வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையும் அதன் நிபந்தனைகளும் ஜெர்மனியரால் ஏகோபித்துக் கண்டிக்கப்பட்டன. ஆனல் அவற்றை அங்கீகரிக்கும் ஓர் நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் சிறிதுகாலம் வாளாவிருந்துவிட்டு, அப்பால் அந்த உடன்படிக்கை நிபந்தனைகளை ஒவ்வொன்ருய்ச் சின்னுபின்னப்படுத்தத் தலைப்பட்டனர். உலக அரசியலில் ஜெர்மனியை ஒதுக்கி வைத்தனர். வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை முதலில் ஜெர்மனியர் புறக்கணித்தனர் அவர்களின் எண்ணத்துக்கு வாய்ப்பாக அப்போது ஐரோப்பிய சூழ்நிலையும் இருந்தது சோவியத் ருஷியாமீது நேசக்கட்சியினர் குரோதம் பாராட்டிக்கொண்டு வந்தனர். தங்கள் கூட்டத்துக்குள் ருஷியாவைச் சேர்க்க நேசக்கட்சியினர்க்கு விருப்பில்லாதிருந்தது. விருப்பமில்லாதிருந்ததோடு அவர்கள் நிற்கவில்லை. ருஷியாவுக்குள்ளே உள்நாட்டுக்கலகங்களையுமுண்டாக்கி அவற்றின் மூலமாக அந்நாட்டைச் சீரளிக்கவேண்டும் என்பதே வல்லரசுகளின் ஆசையாகவிருந்தது. இப்படியான நிலைமையில் ருஷியா என்ன செய்தது? நாட்டுக்குட் கலகம்: வெளியே பகை: இப்படியான சமயத்தில் ஜெர்மனி ஒரு பக்கமும் சேராமல் நடுவு நிலைமையுடன் நின்றுமேலா என்று ருஷியா அங்கலாய்த்தது. உண்மையைக் கூறுங்கால்,

ஜெர்மனியும் ருஷியாவும் அக்காலத்திலே ஒரேநிலையில்தான் இருந்தன. எனவே அவற்றுக்குள் ஒருவித ஒற்றுமைப்பாடு உண்டாயது. அதன் பயனுக 1921-ம் ஆண்டில் ருஷியா-ஜெர்மன் நேச உடன்படிக்கையொன்று முடிவாக்கப்பட்டது. சர்வதேச சங்கத்திலே இந்த இரண்டு நாடுகளுக்கும் அங்கத்துவம் இல்லை என்ற ஓர் சமயத்திலே இவை இரண்டும் இப்படி ஒற்றுமையாயின. இதில் ஓர் விஷயத்தினை நாம் நன்கு சிந்திக்கவேண்டும். 1921 ம் ஆண்டிலே ருஷியாவின் கொள்கைக்கும் ஜெர்மன் கொள்கைகளுக்கும், மலைக்கும் மடுவுக்குமிருந்த வித்தியாசம் இருந்தது. ருஷியா சமதர்மத்தை அடிப்படையாகக்கொண்டிருந்தது. ஜெர்மனியோ அதற்கு முழுவிரோதமான முதலாளித்துவத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது. இப்படிப் பரஸ்பரம் மாறுபட்ட கொள்கைகளைப் பூண்டிருந்தும், இந்த இருநாடுகளும் அப்போது உடன்படிக்கை செய்தமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அந்த உடன்படிக்கைப் பிரகாரம் ருஷியா ஜெர்மனிக்கு மூலப்பொருள்களை அனுப்பவும், ஜெர்மன் கைத்தொழிற் பொருள்களை வாங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது. அது மாத்திரமன்றி ஜெர்மன் விஞ்ஞானிகளும், யுத்த நிபுணரும் ருஷியாவுக்குச் சென்று அங்கே கைத்தொழிற்சாலைகளை நிறுவவும், யுத்த தளங்களை அமைத்து இராணுவத்திற்குத் தக்க பயிற்சி அளிக்கவும் உடன்பட்டனர்.

(வரும்)

# "ஜே! ஹிட்லர்!"

## நாஸித் தளபதியின் கடைசி வணக்கம்!

நியுறெம்பெர்க் சர்வதேச நீதிஸ்தலத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட 11 ஜெர்மன் நாஸித்தலைவர்களில் நஞ்சுண் டிறந்த கோயரிங்கை விட மீதி 10 பேரும் தூக்கிட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்தி ஏற்கெனவே இப் பத்திரிகையில் வெளிவந்ததாகும். இது சம்பந்தமாக சில மனத்தைஉருக்கும் செய்திகள் இப்போது வெளியாயுள்ளன.

குறித்த 11 பேரது பிரேதங்களும் நடுக்கடலில், எவர்க்குந் தெரியாதபடி ஆழ்த்தப்பட்டன. பகிரங்கமான இடம் ஒன்றிலே இவர்களை முறைப்படி புதைத்தால், தப்பித் தவறியிருக்கும் நாஸிக் கட்சியினர், இவர்களுடைய கல்லறைகளைப் பரிசுத்த ஸ்தலங்களாக்கி, அதன் மூலமாக ஜெர்மன் மக்களுக்கு இவர்களது வீரப் பிரதாபங்களைப் புகட்டிப் பழைய நாஸியக் கொள்கைகளைத் தலைதூக்குவிக்க முயற்சிப்பர் என்ற காரணங் கொண்டே இப்படியாக இரகசியமாக நடுக்கடலில் பிணங்கள் ஆழ்த்தப்பட்டன என்று தெரிகிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட பத்துபேரும் கடைசிவரை தாம் இதுகாறும் செய்துவந்தமை பிழையென்றே, அவற்றுக்குப் பச்சாத்தாபப்பட்டோ எதுவுங் கூறவில்லை. நேர்மாருக, தாம் அதிகாரத்திருந்த காலத்தில் தாம் செய்தன அனைத்தும் ஜெர்மனியின் சுபிட்சத்தை யிட்டென்றே அவர்கள் இருந்தனர்.

ஜெர்மனியின் அந்நிய நாட்டு மந்திரியாகவிருந்த றிபன்ரொப்பின் கழுத்திற் கயிற்றைப் போடமுன், அவர் "ஹே! ஆண்டவனே! நீயே என் ஜெர்மனியைக் காப்பாற்றுவாயாக" என்று கூறினர், கழுத்திலே கயிற்றைப் போட்டதும், அவர்: "ஜெர்மன் மக்கள் கடைசிவரை ஒற்றுமையாயிருக்கவேண்டும். கீழைத்தேச மக்களுக்கும் மேலைத்தேச மக்களுககுமிடையே நன்னம்பிக்கையும் சமாதானமும் நிலவவேண்டும், அதுவே உலக சமாதானத்துக்கு உற்ற வழி" என்றுசொல்லிக் கண்ணை மூடினர். சில விநாடிகளில் இறந்தார்.

ஜூலியஸ் ஸ்ரெயிச்சர் என்னும் மற்றவர் கொலைத் தளத்துக்கு மெல்ல மெல்லவாக ஏறினர், மேடையில் நின்றுர். "ஜே! ஹிட்லர்!" என்று உரக்கக் கர்ச்சித்தார். அவர் கழுத்திற் கயிற்றை மாட்டி அவரைக் கொன்றனர். அவர் உயிர்போகும் அந்த நேரத்திலே, "ஆ! அடெலே! என் காதல் துணைவி!" என்று தன் மனைவியை நினைத்துக் கதறினர்.

ஜெர்மன் சேனுதிபதிகள் என இருந்து ஐரோப்பா முழுவதையும் நடுநடுங்கச் செய்த கெயிற்றல் என்பவரும் ஜோடல் என்பவரும் எவ்விதமான மனச்சோர்வு மின்றித் தூக்குமேடையில் ஏறினர். தம் ஆவியைப் பறிகொடுத்தனர். ஜோடல் என்பவர் "ஹே! ஜெர்மனி என் தாய்நாடே! உனக்கு என் கடைசி வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்" என்றுர்.

## வங்கி வேலைநிறுத்தத்தில் சமரசம்

ஏறக்குறைய 2 மாத காலமாக இலங்கையைப் பாதித்துவந்த வங்கி வேலைநிறுத்தம் சென்ற வெள்ளிக்கிழமை சமரசமாக முடிந்துவிட்டது. வேலைநிறுத்தம் செய்த வங்கிக் கிளார்க்மார் நேற்றைத் தினம் தத்தம் உத்தியோகத்தானங்களுக்கு மீண்டனர் என்று அறியக்கிட்க்கின்றது.

# சுபாஷ் இருக்கிறுரா?

## நேரு - யாஜி விவாதம்

சுபாஷ் சந்திரபோஸ் உயிருடன் இருக்கிறுரா? அல்லது அவருடன் இருந்த அப்துல் றகிமான்என்பவர் கூறுகிறபடி அவர் வந்த விமானம் நொருங்கியதால் அவ் விபத்தில் அகப்பட்டு நொருங்கி உயிர் துறந்தாரா? இந்தப் பிரச்சினை இப்போது சில காலமாக இந்திய மக்களை மிகவும் பாதித்து வருகிறது.

சுபாஷ் சந்திரபோஸ் உண்மையில் இறந்தே விட்டார் என்றும், அவர் அங்கேயிருக்கிறுர், இங்கே நிற்கிறுர் என்னும் வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் இந்தியப் பிரதம மந்திரி பண்டிதர் ஜவஹர்லால் நேரு சென்றவாரம் பத்திரிகைகளுக்கும் பொதுஜனங்களுக்கும் ஓர் அறிக்கை விடுத்தார். அவ்வளவுடன் விஷயம் முடிந்துவிட்டது எனச் சகலரும் இருக்க, அகில இந்திய முன்னணிக்கட்சி உபதலைவரான ஷீல் பத்ர யஜி என்பவர், பண்டிதர் நேருவின் அறிக்கையை ஆட்சேபித்து சுபாஷ் சந்திரபோஸ் உயிருடன் இருக்கிறுர் என்றும், அவர் சந்தர்ப்பம் நேரும்போது இந்தியாவிலே தோற்றுவார் என்றும் ஓர் பகிரங்க அறிக்கையை விடுத்திருக்கிறுர்.

பண்டிதர்நேரு சகல சர்வதேச இரகசிய ஒற்றர்கள் விடுத்திருக்கும் அறிக்கைகளைச் சரிவர ஆராயாமல், மிஸ்ரர் அப்துல் ரஹிமானின் பேச்சை மாத்திரம் கேட்டு இப்படி முடிவுக்கு வந்தமை பிழை என்றும், வேண்டியநேரத்தில் பாரதநாட்டின் தலைமைப்பதவியைத் தாங்க நேதாஜீ போஸ் வருவது முக்காலும் சத்தியம் என்று ஸ்ரீ யாஜி வற்புறுத்துகிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜவுளிக் கட்டுப்பாடு

மேலைப் புலோலி சி. நா. சோ.

ஆயிரக்கணக்கில் லட்சக் கணக்கில் முதலையிட்டு வெகு கஷ்டப்பட்டு வியாபாரத்தை நடத்தி வந்தோம். லாபம் வந்தாலுஞ் சரி, பெரும் நஷ்டம் வந்தாலுஞ்சரி எல்லாவற்றையும் சமமாகப் பொறுத்தோம். ஆயின் உலகானுபவமற்ற சிறுவர்கள் தங்களை ஆகாயத்திலிருந்து குதித்த படியளக்கும் பெருமாளாகக் கற்பனை செய்து எங்களையெல்லாம் செக்கு மாடுகளைப்போல் அடக்கி அதிகாரம் செய்ய வந்துவிட்டார்கள். நாங்கள் செய்த — செய்யும் கொடுமைகளுக்குத்தான் இப்படி யாயிற்றோ; இன்னும் என்னுகிறதோ என்றெல்லாம் சொல்கிறார்கள் வியாபாரிகள்.

பணத்தைக் கொடுத்தோம் புடைவை வாங்கினோம் என்ற காலமெல்லாம்போய் கூப்பன் என்று ஒன்றை வைத்தார்கள். ஏதோ கட்டுப்பாடென்று சீத்தைகளை சேலைகளை அப்பி அவற்றின் அழகைக் கெடுப்பதுமன்றி நீ எங்கிருப்பவன்? உனக்கு எத்தனை பெண்டாட்டி, எத்தனை பிள்ளைகள், அவர்கள் பெயரென்ன? உன் அரிசிப்பங்கீட்டுப் புத்தகமெங்கே? என்றெல்லாம் மானத்தையும் பிராணனையும் வாங்குகிறார்கள் இந்த வியாபாரிகள். இவர்களுக்கிருக்கும் மண்டைக்கெறு .... ... ... என்றெல்லாம் பாமர சனங்கள் சொல்கிறார்கள். இவ்வாறெல்லாம் செய்வது வெறும கற்பனையா?

புடைவைக் கூப்பனுடன் அரிசிக் கூப்பனும் கொண்டுவந்தா லன்றி வியாபாரிகள் புடைவை கொடுப்பதற்கு மறுக்கலாம் என்ற சாரமாக புடைவைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிக்கை வெளியாயதை எவரும் மறந்திரார். தற்போது புடைவைக் கூப்பனுடைய இலக்கமும்-அரிசிப்பங்கீட்டுப்புத்தகத்தின் இலக்கமும் புடைவை விற்பனை செய்யும் "பில்லில்" குறிக்கப்படவேண்டுமென வியாபாரிகளுக்குக் கட்டளை கிடைத்திருக்கிறதாம. இதற்காக அவரைப் பாராட்டத்தான்வேண்டும். ஆயின், எத்தனை வியாபாரிகள் இந்த ஒழுங்கைக் கையாளுகிறார்கள், கையாள முடியுமாவென்பதைச் சிந்திக்கவேண்டும். வெளியுலக நடை முறைகளை அறியாத நாட்டுப்புற மக்களிடம் இத்தகைய ஒத்துழைப்பை வியாபாரிகள் பெறுவதும் - முயற்கொம்பு பெறுவதும் ஒரே சமமென்பதை காகிதத்தில் உத்தரவை எழுதித் தள்ளுபவர்கள் அறிவார்களா? கட்டளைக்கு மாறாக நடப்பவர்களின் 'லைசென்ஸ்' ரத்துச் செய்யப்படு மென்பது சட்டமாம். யோக்கியரென்று வேஷம் போட்டு நடப்பவர்கள்கூட அணுவளவாவது பிசகு புரியாது நடப்பதாகக் காணோம்.

மேல் மாகாணத்தையும் அதைச் சார்ந்த ஊர்களையும் அதாவது அடுத்த மாகாணங்களிலும் வாசஞ் செய்யும் பெண்கள் உடைக்கும் யாழ்ப்பாணப் பெண்கள் உடைக்கும் இருக்கும் தாரதம்மியத்தை ஆராய்ந் துணர்ந்தே "சீத்தை" போன்றவைகளெல்லாம் இங்குள்ளவர்களுக்கு அத்தியாவசியமற்றவையென விடுத்து இலங்கையில் இறக்குமதியாகும் (தடித்த) 7 யார், 8 யார் சேலைகளையெல்லாம் யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஒதுக்குவதாக ஜவுளிக்கட்டுப்பாட் டதிகாரி எங்கோ சொன்னாராம். இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள எந்தப் புடைவைக் கடைக்குப் போய்ப் பார்த்தாலும் 30 ம் நம்பருக்குட்பட்ட தடித்தசேலைகள் நிறைய இருப்பதன்றி வேறொரு விதமான துணியையும் காணமுடியாது. ஆகவே, ஜவுளிக்கட்டுப்பாட்டதிகாரியின் தாராள மனோபாவத்தை மெச்ச வேண்டும். கட்டுப்பாடுகளையெல்லாம் எடுத்து முன்போல போட்டி வியாபாரம் நடைபெறச் செய்தால் கள்ளமார்க்கட்டை இலகுவில் ஒழிக்கலாம் என்று இந்திய இடைக்கால சர்க்கார் மந்திரி ராஜாஜி சொன்னதை வைத்துக்கொண்டு கட்டுப்பாட்டை எடுத்துவிட்டால் எல்லாம் சரியாய்விடும் என்று எதிர்ப்பது தவறாகும்.

அடிக்கடி ஏற்பட்ட கலகங்கள் - வேலை நிறுத்தங்களால் மில்களில் உற்பத்தி எவ்வளவோ குறைய - தமக்கு ஆபத்து வேளைகளில் உணவளித்துக் காத்த - காக்கும் அயல் நாடுகளுக்கு உடை அனுப்பவேண்டிய கடமையும் ஏற்பட்டதால் அயல் நாடாக இருந்தும் இந்தியா இலங்கைக்கு அனுப்பும் துணி "கோட்டாவை" குறைத்து விட்டது, எப்பொருளுக்கும் பிறதேசங்களையே எதிர்பார்க்க வேண்டிய நிபந்தனைக்குள் ளிருக்கும் இலங்கை மக்களுக்கு இதனால் உடைப்பஞ்சம் அதிகமாகிவிட்டது. இந்திய துணிகள் செய்யும் தேவையின் பூர்த்தியை மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் துணிகள் எவ்வளவு தொகையானதா யிருப்பினும் செய்யமாட்டாதென்பதை எவரும் மறக்கமாட்டார். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேலைத்தேசங்களிலிருந்தாவது - ஜப்பான் போன்ற கீழைத் தேசங்களிலிருந்தாவது முன்போல் துணிகள் வந்தாலாவது ஓரளவுக்கு இந்த நெருக்கடி தீரும். ஆயின் அத்தேசங்கள இலங்கை போல் இன்னும் எத்தனையோ தேசங்களின் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டி யிருக்கிறது. இந்தியா ஓரளவாவது ஆலைத்துணி உற்பத்தியாலும் காந்தஜீயின் கதரின் சேவையாலும் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். இலங்கையில் எத்தனை ஆலைகள் இருக்கின்றன? எல்லாவற்றையும்விட எங்காவது ஒரு பருத்தி உற்பத்தியாகிறதா? ஆகலின் கட்டுப்பாட்டையும், கூப்பனையும் எடுத்துவிடின் எல்லாம் சரியாய்விடும் என்று நாம் கனவுகாணவொண்ணாது. தற்போதுள்ள நிலையில் ஆண்டில் ஒருமுறையாவது மலிந்த பொருள்களை ஏழைகள் காண்கிறார்கள்.

இலங்கையில் பருத்தி உற்பத்தி செய்ய நிலம்புலம்கிடையாதா? வளம் தான் இல்லையா? பணத்தைவிளையாட்டுப் பொருளாகக் கருதும் அரசாங்கத்திடம் பணம்தான் இல்லை. இவற்றையெல்லாம் பிரயோகம் செய்ய ஆட்கள்தான் இல்லையா? சகல வசதியும் இருக்கும்போது பருத்தியை விளைவித்து-நூல் நூற்று-துணியாக்கலாமே. அயல்நாடாகிய இந்தியாவில் காந்தியின் முயற்சியால் சுழலும் 'ராட்டை' எத்தனைபேருக்கு வயிற்றுக்குணவளிக்கிறது? இங்குள்ளவர்களுக்கு இது புது முயற்சியாயின் இந்தியாவில் இதையே தம் உயிராசக் கருதும் லட்சாதிலட்சம் பேரில் ஒரு சிலரை அழைப்பித்துப் பழகலாமே. ஒரு துணியையே வைத்துக்கொண்டு பலகாலம் துணியிலேயே புரண்டுபழகியோரையும் பைத்தியகாரராக்கி இது 30 நம்பர் துணி இல்லை 20×30 இல்லை 80×16 என்றெல்லாம் கணிக்கும் நிபுணர்களுக்கு ஆயிரக்கணக்கில் ஏழை மக்கள் இரத்தத்தைப் பிழிந்தெடுத்த பணத்தை வாரியிறைத்துப் புண்ணியந்தேடும் புடைவைக் கட்டுப்பாடிலாகா இத்[illegible] லைச் செய்யலாமா? ஏட்டு மக்களுக்கு [illegible] (நன்மை செய்யும்) இத்தகைய திட்டங்களால் எவ்வளவு உபாயம் என்று தெரியாமலா எங்களை ஆள்பவர்கள் இருக்கிறார்கள்.

## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

1. வல்வெட்டித்துறை தம்பிப்பிள்ளை இராசாவும், 2. பெண் அன்னம்மாவும் - வழக்காளிகள்.

இல. 2618-P

1. வல்வெட்டித்துறை வடிவேலு வேலுப்பிள்ளை, 2. பெண் பாறுபதிப்பிள்ளை, 3. ஆறுமுகம்செல்லத்துரை, 4. பெண் தங்கரத்தினம், 5 பொன்னுச்சாமி சோமசுந்தரம், 6. பெண் சிவகாமிப்பிள்ளை, 7. சின்னத்தம்பி தங்கேஸ்வரராசா, 8. சவே. சின்னத்தம்பி, 9. தற்காலம்கொழும்பு C. T. O ல் இருக்கும் செந்திப்பெருமாள் வேலுப்பிள்ளை, 10. வல்வெட்டித்துறை T. நடராசா கைம்பெண் சிவக்கொழுந்து 11. சின்னையாசெல்லத்துரை, 12. சோமசுந்தரம் சோதிலிங்கம், 13. சோமசுந்தரம் சுந்தரலிங்கம், 14. பெண் சிவபாக்கியம், 15. பருத்தித்துறை நடராசாகைம்பெண் யோகாம்பிகை அம்மாள். 16. வல்வெட்டித்துறை வல்லிபுரம் கைம்பெண் சின்னம்மா, 17. சுந்தரம் துரைசாமி, 18. பெண் தங்கப்பாக்கியம், 19 வாரித்தம்பி கந்தசாமி, 0. A நாகலிங்கம் வேலாயுதம் 21. கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம், 22. தம்பையா கைம்பெண் ஆச்சிமுத்து எதிரிகள்.

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிசன் அதிகாரப்படியும் 1946ம் ஆண்டு கார்த்திகைமாதம் 28-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 6 கண்டங்களாக பிரிவிடப்பட்டு அவ்வாதனத்தில் நின்று ஒவ்வொருகண்டத்தின் மதிப்புத் தொகையிலிருந்து முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினால் உடனே அந்த இடத்திலே பிரசித்த ஏலத்திலும் என்னால் விற்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்வெட்டித்துறை கந்தர்காடு நிலப்பரப்பு 14 இதற்குஊடாகச்செல்லும் றோட்டுக்கு எடுக்கப்பட்ட நிலம் நீக்கி மிகுதி நிலப்பரப்பு 9 குளி $14\frac{18}{32}$ இவை உலாந்தாமேஸ்தர் வே. சிவரத்தினம் அவர்களால் 1946ம் ஆண்டு வைகாசிமாதம் 11-ந் திகதி 275ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு இவ்வழக்கில Z என்னும் அடையாளத்துடன் அணைக்கப்பட்ட படத்தில் 1-ம், 2-ம், 4-ம் துண்டுகளாய் காட்டப்பட்டதுமாகிய ஆதனம் இதற்குள் அடங்கிய தகரக்கொட்டில்களும் பயிர்களும் உட்பட எல்லைகிழக்கு தியாகராசா பெண் வேதநாயகியுடைய உருமைக்காறருக்குரிய ஆதனமும் றோட்டும், வடக்கு தெரு, மேற்கு சின்னத்தம்பி அப்பாத்துரைக்குமுடைய ஆதனமும் றோட்டும் கை ஒழுங்கையும் தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சுமி அம்மாளுக்கும் மறுபேருக்குமுடையஆதனம். மதிப்பு ரூபா 11242 சதம் 67.

(1) 1ம் கண்டம் நிலப்பரப்பு 1, குளி $6\frac{3}{32}$ மதிப்பு ரூபா 19.3/54 சதம்; எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு தெரு, மேற்கு 2ம் நம்பர்க்கண்டம், தெற்கு றோட்டு.

(2) 2ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி $1\frac{14}{32}$ மதிப்பு ரூபா 1256/91 சதம்; எல்லை கிழக்கு 1ம் நம்பர்க் கண்டம், வடக்கு தெரு, மேற்கு சின்னத்தம்பி அப்பாத்துரைக்குடைய ஆதனம், தெற்கு றோட்டு.

(3) 3ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி $15\frac{16}{32}$ மதிப்பு ரூபா 2172/71 சதம்; எல்லைகிழக்கு 4ம் கண்டம், வடக்கு றோட்டு, மேற்கு ஒழுங்கை, தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சிமி அம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

(4) 4ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி $15\frac{16}{32}$ மதிப்பு ரூபா 2422/71சதம்; எல்லை கிழக்கு 5ம் நம்பர்க் கண்டம் வடக்கு றோட்டு, மேற்கு 3ம் நம்பர் கண்டம், தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சிமி அம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

(5) 5-ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி $15\frac{16}{32}$ மதிப்பு ரூபா 1955/; எல்லை கிழக்கு 6ம் நம்பர்க் கண்டம், வடக்கு றோட்டு, மேற்கு 4ம் நம்பர்க்கண்டம், தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சிமி அம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

(6) 6ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி $15\frac{16}{32}$ மதிப்பு ரூபா 1491/89சதம் எல்லை கிழக்கு தியாகராசா பெண் வேதநாயகியின் உரிமைக்காறர்களுக்குரிய வாதனம். வடக்கு றோட்டு, மேற்கு 5ம் நம்பர்க்கண்டம், தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சிமி அம்மாவுக்கும் மறு பேருக்குமுடைய ஆதனம்.

வி. முதலியார் குழந்தைவேலு,
கொம்மிஷனர்.

பருத்தித்துறை,
14-10-46.

Mis 196 22

## இனி அஞ்சிடோம்!
## அடிமைவாழ்வில் துஞ்சிடோம்!

சுபாஷ் சந்திரபோஸின் பிரதிநிதியாக ஜெர்மனியில் இருந்த மிர்ஸா பேக் என்னும் மூஸ்லிம்வீரன் இப்போது ஜெர்மனியி லிருந்தும் விடுதலையாகி இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார். அவரை இந்தியமக்களும் பிரிட்டிஷ் பிரமுகர் சிலரும் வரவேற்று உபசரித்தனர். சென்றவாரம் அவர்க்கு உபசரணை செய்வதற்காக லண்டனில் ஓர் பிரமாண்டமான கூட்டம் நிகழ்ந்தது.

அக் கூட்டத்தில் வீரன் மிர்ஸா பெக் ஓர் பிரசாரணம் புரிந்தார். 1942 ம் ஆண்டிலேயும் அதற்கு முன்னரும் பாரதநாடு ஓர் பெரிய சுதந்திரப் போராட்டத்தை நிகழ்த்தியது. அப் போராட்டத்தை முறிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளும், இந்தியாவிலுள்ள சிலதுரோகிகளும் கங்கணம் கட்டி நின்றனர். இப்படுபாவிகளை எல்லாம் பகிரங்கமாக விசாரணை செய்யவேண்டும். இங்கிலாந்தாவது, அமெரிக்கா ஆவது, ஸ்ராலின்தானும் எங்களுக்கு உதவி செய்யவேண்டியதில்லை உதவி செய்யுங்கள் என்று நாம்இவர்களைக் கேட்கப் போவதுமில்லை. எங்கள் காலில் நிற்க நாங்கள் பயின்றவிட்டோம். எங்கள் வீரன்—எங்கள் சேனாதிபதி—எங்கள் நேத்தாஜி—சுபாஷ் சந்திரபோஸ் எங்களுக்கு ஓர் சக்தியை ஊட்டியிருக்கிறான். இனி அஞ்சிடோம்! எங்கள் சொந்தநாட்டில் அடிமை வாழ்வில் துஞ்சிடோம்"

என்று வீரன் மிர்ஸாபெக் தன் பிரசாரணத்திற் குறிப்பிட்டார்.

## பர்மா அரிசி வந்தது

சென்ற ஞாயிற்றுக்கிழமை ஏறக்குறைய 6000தொன் நிறைகொண்ட பர்மா அரிசி கொழும்பில் இறக்குமதிசெய்யப்பட்டது. யுத்தத்தின்பின் பர்மாவிலிருந்து இலங்கைக்குவந்தது இது இரண்டாம் முறையாகும்.

## எட்டாம் வகுப்புத் தேர்தற் பரீட்சை 1946

வித்தியாதிகாரிகள் ஒழுங்கு செய்த பரீட்சை ஸ்தானங்களில், 1946ம் ஆண்டு டிசெம்பர்மாதம் 13-ம், 14-ம் திகதிகளில், மேற்குறித்தபரீட்சை ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும்

2 பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்ப அட்டவணைகள் பாடசாலை இருக்கும் வட்டாரத்துக்குரிய வட்டார வித்தியாதரிசி 1946ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26க் திகதிக்குப் பிந்தாமல் பெற்றுக்கொள்ளத் தக்கதாக அனுப்பப்பட வேண்டும்.

3. அவ்வவ் மாகாணத்துக்குரிய வித்தியாதிகாரியிடம் பரீட்சை விதிகளின் பிரதிகளையும் விண்ணப்ப மாதிரிப் பத்திரங்களையும் பாடசாலை முகாமைக் காரர்களும் தலைமை ஆசிரியர்களும் பெற்றுக் கொள்ளலாம்.

4. சகல அரசினர் பாடசாலைகளும் இப்பரீட்சையில் பங்குபற்ற வேண்டும், உதவி நன்கொடைப்பணம் பெறும் பாடசாலைகள் 1946ம் ஆண்டுப் பரீட்சையில் விரும்பின் பங்கு பற்றலாம்.

இயன் சான்டிமன்,
வித்தியாதிபதி.

கொழும்பு,
14-10-46. G 94 22, 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராசபுரப் புகைரத விபத்து

## 7 பேர் மாண்டனர்

ஏற்கெனவே இப் பத்திரிகையில் வெளியானபடி சென்ற வியாழக் கிழமை மாலை 7 மணிக்குக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புறம்பட்ட புகைரதம தளாவை அநுராசபுரம் என்னும் ஸ்தானங்களுக்கிடையில் விபத்துக்குள்ளாயது இந்த விபத்தின் காரணமாக, உடன் நால்வர் இறந்தனர் என்றும், 47 பேர் காயமடைந்தார் என்றும் அவர்களில் 15 பேர் சடுங்காயமடைந்தனர் என்றும் ஓர் அறிக்கை கூறுகிறது. கடுங்காயமடைந்தவர்களில் 2 பேர் பிறகு இறந்தனர்.

தண்டவாளத்தில் இருந்து திருகு ஆணிகள், இரும்புத் தகடுகள் அகற்றப்பட்டிருந்தமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிகிறது.

புகைரதம் ருகமத்தை விட்டுப் புறப்பட்டதும் வழிநெடுக அதன் மீது கற்கள் வீசப்பட்டன. கல்வீச்சிலிருந்து சாரதி வண்டியைச் செலுத்திக்கொண்டு போனார். மாகோவில் இந்தப் புகைரதம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த புகைரதத்தைச் சந்தித்தது அம்பன்பலாயில் தலைமன்னார் ரதத்தையும் சந்தித்தது இதிலிருந்து ஷ ரதத்தைச் சந்தித்த யாழ்ப்பாணப் புகைரதமும், தலைமன்னார் ரதமும் கொழும்பை நோக்கிச் சென்ற பின்னரே தண்டவாளத்து ஆணிகள் கழற்றப்பட்டனவென்று தெரிகிறது. புகைரதம் பாதையை விட்டு விலகியதும், முன்னால் இருந்த பெட்டிகள் யாவும் கவிழ்ந்துவிட்டன. அவற்றில் இரண்டு தலைகீழாகப் புரண்டன. சாமான் வண்டிகள் நொருங்கின இவற்றுக்குப் பின்னுக்கு வந்த இரு பெட்டிகள் ஒன்றோடொன்று மோதி ஒன்றற்குள் மற்றது புகுந்தது.

இறந்தவர்களில் புகைரதப் பகுதியில் "செக்கரா"யுள்ள நாகரத்தினம் என்பவரும் ஒருவராவர்.

வெந்த வீட்டில் பிடுங்கியதுறுதி என்றுங்கு பல திருடர்களும் இந்த விபத்து நடந்த இடத்துள் நுழைந்து களவாடத் தொடங்கினர். பலர் தங்கள் பொருள்களை இழந்தனர். பலர் பணமிழந்தனர். ஒரு பிரயாணி மட்டும் 3300ரூபாவைப் பறிகொடுத்தார்

இந்த விபத்துக்கான எளிய செயலைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் ஜரூராக முயற்சி செய்கிறது.

# வேலை நிறுத்த நிலை

## 25000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

இலங்கையிலே வங்கிக் கிளார்க்மார் வேலைநிறுத்தம் ஒழிந்துவிட்டபோதிலும், மற்றும் தொழிலாளரின் வேலைநிறுத்தம் ஓய்ந்தபாடில்லை. மாறாக இது வரவர அதிகரித்துக் கொண்டே வருகிறது. புகைரதத் தொழிலாளருடன் இப்போது துறைமுகத் தொழிலாளரும், கொழும்பு நகரசுத்தித் தொழிலாளரும் சேர்ந்து எல்லாமாக 25000 பேர் வேலைநிறுத்தம் செய்துள்ளார் என்று தெரிகிறது

யாழ்ப்பாணத்துப் புகைரத ஸ்தானத்திலேயுள்ள தினச் சம்பளம் பெறும் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். இப்போது கொழும்புக்குப் புகைரதப் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. காங்கேசன்துறை - பலைப் புகைரதம் தினம் இருமுறை ஓடுகிறது.

தொழிலாளராயுள்ளார், தாம் எதுவரினும், வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதில்லை என்று பிடிவாதமாக நிற்கின்றனர்.

சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம் முதலாம் ஸ்தானங்களிலிருந்து வழக்கமாக ஏற்றுமதி செயயப்படும் காய்கறிச் சாமான்கள் அப்படி ஏற்றுமதி செய்யப்படாமையினால் ஊரவர் பெரிதுங் கஷ்டப்படுகின்றனர். ஏற்றுமதியின்மையினால், காய்கறிப் பொருள்களின் விலை 100க்கு 60 விகிதம் குறைந்திருக்கிறது

வெளியூர்க் காகிதப் போக்குவரத்தும் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது.

இப்போதுள்ள நிலைமையைத் திருத்துதற்கு அரசாங்கம் சமரசம் பேச முன்வந்தால், அப்படிச் சமரசம் பேசுதற்கு பின்வருவோரை அரசாங்கத் தொழிலாளர் சம்மேளனம் நியமித்திருக்கிறது: டக்ரர் என். எம். பெரேரா, டக்ரர் கொல்வின் ஆர். டீ. சில்வா, ஏ. இ. குணசிங்க, எம். ஜீ. மெண்டிஸ்.

## நாளைத் தீபாவலி!

இப் புனித தினத்தைப் புல நுகர்ச்சிப் பொருள்களில் ஈடுபட்டு அவமாக்காது, இறைவனைத் துதித்து, அவனருள் பாடி, இடைஞ்சல்கள் அகற்றுமின்!

# சமரசம்!

## உருளிவெளித் தோட்டப் பிரச்சினை

உருளிவெளித் தோட்டப் பிணக்கு இப்போது சமரசமாக முடிவடைந்துவிட்டது. அங்குள்ள இந்தியத் தொழிலாளர் இன்றைக்கிடையில் தோட்டத்தை விட்டு வெளியேறிவிடுவார்கள்.

இப்படி வெளியேறும் தொழிலாளருக்கு வேறு தோட்டங்களில் வேலை கொடுக்கவும் அந்தத் தோட்டங்களுக்குச் செல்ல இலவசமாகப் போக்குவரவு வசதிகளைச் செய்து கொடுக்கவும் அரசாங்கம் சம்மதித்திருக்கிறது. அதோடு தொழிலாளர் மீது தொடரப்பட்டிருக்கும் கிரிமினல் வழக்குகளையெல்லாம் நீக்கவும் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யவும் அரசாங்கம் சம்மதித்திருக்கிறது.

கடைசித் தொழிலாளி தோட்டத்தைவிட்டு வெளியேறியவுடன் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு தேசாதிபதியிடம் சிபார்சு செய்யப்படுமென்று காணி அதிகாரி ஸ்ரீ ஏ. ஜீ. ரணசிங்க கூறினார்.

இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் சமரசப் பேச்சுக்கள் நடந்து ஒரு சமரச உடன்படிக்கை ஏற்படும்வரை கிராம விஸ்தரிப்புத் திட்டத்தை தோட்டங்களில் இனி அமுல் நடத்துவதில்லையென்றும் தொழிலாளரைத் தோட்டங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றுவதில்லையென்றும் அரசினர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

உ

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

காசுறழ் பதுமப் போது களஞ்சிய தாக மீச்செல்
பாசடை கவிகை யாகப் பலநனை விளக்க மாக
வீசிகள் கவரி யாக மிழற்றுள் ளியம தாக
மாசறு பொய்கை சேய்க்கு வளம்பட வொழுகிற் றன்றே

மாணிக்க மணியை யொத்த (செந்) தாமரைப் பூக்கள் காளாஞ்சியாகவும், கிளர்ந்துயர்ந்த பசிய தாமரை யிலைகள் குடைகளாகவும், தாமரை மொட்டுக்கள் பல தீபமாகவும், திரைகள் சாமரையாகவும், (பலவகையான) ஒலியைச் செய்கின்ற பறவைகள் வாத்தியங்களாகவும் குற்றமற்ற நீர் நிறைந்த சரவண வாவியானது குமார மூர்த்திக்குப் பல வரிசைப் பொருள்தோன்ற விளங்கியதென்பது கருத்து.

அரசர்க்குரிய மங்கலமான வரிசைப் பொருள்களனைத்தும் குமாரமூர்த்தி யெழுந்தருளிய சரவண வாவியின்கண்ணே வழங்கிய காட்சி போலத் தடாகத்திற் காணப்பட்ட வென்றபடி. குடை மேலேபிடிக்கப்படுவதாதலின் "மீச்செல் பாசடை கவிகையாக" என்றார்; அலர்ந்த செந்தாமரைப் பூக்கள் காளாஞ்சிபோல் விளங்க, அவிழாத செந்தாமரை மொட்டுக்கள் விளக்கம்போற் காணப்பட்டன; அது பகுதிப் பொருள் விகுதி.

[காசு - மாணிக்கம்: வீசிகள் - திரைகள்] (110)

அழனிவந் தன்ன கஞ்சத் தகன் றடத் திரைக ணப்பண்
உழிட ராது சூழ்போந் தலவுவ தானை நீரால்
விழுமிய குமரன் பொய்கை வெளிப் படா தமர ரிட்ட
எழினிகள் புடையே மென்கா லெறிதலி னிரட்டல் போலும்

தீச்சுடர் கிளர்ந்தாற்போன்ற செந்தாமரைப் பூக்கள் செறிந்த பரந்த சரவணத் தடாகத்தின்கண்ணே திரைகளானவை நடுவிடத்து வீசுதலின்றி நாற்புறமுஞ் சூழ்ந்துமறிதல் (எதனை நிகர்த்ததெனின்) பெருமை பொருந்திய குமரமூர்த்தி அத்தடாகத்தின் புறத்தே வெளிப்படாது, தேவர்கள் நீர்த்திரையாகிய வஸ்திரத்தினால் மூட்டுள்ள திரையாடையானது சிறு தென்றல் வீசுதலினாற் பக்கல்தோறும் அசைதலை நிகர்க்கும் என்பது கருத்து.

மத்தியிலே குமரவேள் செந்தாமரை மலராகிய ஆசனத்தின் மீது எழுந்தருளி யிருப்ப அச்சரவணப் பொய்கையிலே யெழும் அலைகள் மத்தியில் மறிதலின்றித் தென்றல்வீச நாற்கரையிலும் மறிதல், அக்குமரமூர்த்தியைப் புறத்தே யெவருங் காணாவண்ணம் தேவர்களிட்ட திரையாடையானது அசைதலை யொக்கு மென்றபடி. தானை நீரால் என்பதை நீர்த்தானையால் என இயைத்துப் பொருள்கொள்க.

குழவிப் பருவத்தோடு கூடிய சேயாதலின், வரத்தாற் பெரியனாய், அரிபிரமேந்திராதி தேவர்களாகிய தங்கட்கு இடையறா இன்னல் விளைக்குஞ் சூரபன்மன் இக்குழந்தை சரவணப் பொய்கையில் உறுதலைக் காணின் இச்சேய்க்கும் யாதும் ஊற்றஞ் செய்வானென்ற அச்சங் கொண்டு இச்சேயை மறைத்துப் பாதுகாக்கும் வண்ணம் திரையிட்டவாறு காணப்பட்டதென்க; அமரர்கள் அங்ஙனம் அச்சங் கொண்டு திரையிடுதல் அவர்களுடைய அறியாமையின் பாற்படு மென்பதைக் குறிப்பால் விளக்குதற்கே, அவன் சேயல்லன் குமரனானவன், குமரனிலும் சாமானிய குமரனல்லன் தெய்வக் குமரனெனபார் 'விழுமிய குமரன்" என்றார் போலும்.

[எழினி - திரை; அது ஐவகைப்படும்; அவையாவன: ஒருமுக வெழினி, பொருமுக வெழினி, கரந்துவரு மெழினி இங்கே கூறிய எழினி கரந்துவரு மெழினியென்க] (111)

கொன்படை சேவலாகு மேகின மோர் கோடி யீசன்
றன்பெருங் குமரற் சூழத் தடத்தினின் மிழற்ற லெந்தை
பொன்பிறழ் பதுமன் செய்கை புரியுநா ளூர்தி யாவல்
என்புடை யிருத்தி யென்றே தமித்தமி யிரத்தல் போலும்

பெருமையுடைய கோடிக்கணக்கான அன்னச்சேவல்கள் சிவகுமாரராகிய சண்முகக் கடவுளைச் சூழ (நீங்கியவண்ண மமைந்து) அத்தடாகத்திலே ஒலிசெய்தல் (எதனை நிகர்த்ததெனின்)எங்கள் பரமபிதாவே, பொன்மயமாக விளங்குகின்ற தாமரைப்பூவை யாசனமாகக் கொண்ட பிரமதேவன் செய்யும் படைத்தற்) செயலை, தேவரீர் செய்தருள நிகழுங்காலத்தில், "நான் வாகனமாவேன், என்மேல் தேவரீர் எழுந்தருளலாகும்" என்று (அவ்வன்னங்கள்) தனித்தனி வேண்டுதலை நிகர்க்கும் என்பது கருத்து.

சரவண வாவியிலே, முருகக் கடவுளைச் சூழ அன்னச்சேவல் மிழற்றுதல், அன்னவாகனராகிய பிரமதேவர் சிருஷ்டித் தொழிலைச் செய்யவியலாதாக, அத்தொழிலைத் தேவரீர் செய்யுங் காலத்து, தேவரீருக்கும் ஒரு அன்னவாகனம் வேணுமல்லவா, அந்த நேரத்தில் எங்கையே என்னையே வாகனமாகக் கொண்டருள வேண்டுமென முருக மூர்த்தியைப் பிரதக்கிணஞ் செய்து முன்னிலையில் நின்று தனித்தனி யிரத்தலை நிகர்க்குமென்றபடி. சூழ்தலை வலம் வருவதாகவும் மிழற்றலை வரமிரத்தலாகவும் கொள்க.

பின்வருங் காரியத்தை முந்தியே யறியும் ஞானமுடைய அன்னமென எடுத்துக்கொண்டதற்கியைய "கொன்படை சேவல்" என்றார்; வாகனமாக வழங்கப்படுபவற்றுள் பெண்ணினத்தைச் சேர்ந்ததெனச் சொல்லப்படும் காமதேனுவொன்றொழிய, ஏனையவூர்திகளெல்லாம் ஆணினத்தைச் சேர்ந்தனவாகலின் இங்குஞ் "சேவல்" எனப்பட்டது; கோடி மிகுதிபற்றி வந்தது; பதுமன் செய்கை - படைத்தற்றொழில் புரியுநாள்— பிரணவத்தின் பொருளுணராப் பிரமனைக் குட்டிச் சிறையிலிட்டுத் தாம் சிருஷ்டித் தொழிலைச் செய்யும் நாள். தமித்தமி - தனித்தனி, தமித்தமியென் றெடுத்துக்கொண்டதற்கியைய, "ஊர்தியாவல், என்புடை" என ஒருமையிற் கூறப்பட்டது; இது பின் நிகழ்வதை முன் உய்த்து வருணித்தவாறாம்.

[பாலையும் நீரையும் வேறுபிரித்துப் பாலையே யுண்ணும் பான்மையுடையதாதலின் கொள்படை சேவலென்றார். (112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள். எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

# அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

## வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)



# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



# கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பேரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் [illegible]
[illegible]

Mis 27 26-4—25-10 (செ)


## வீராங்கனை விஜயம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

1. பம்பாய் உயர்தர நீதிபரசர் ஸ்ரீ எம். ஸி. சக்லா.
2. சேர்.மகாராஜசிங்—பிரபல நியாய வாதியும் அரசியல் நிபுணரும்.
3. மிஸ்ரர் பிராங்ஆந்தோனி—அகில இந்தியாவிலும் ஆங்கில-இந்திய சமூகத்தின் தனிப்பெருந் தலைவர்.
4. நவாப் அலி யவார்யங்—ஹைதராபாத் சமஸ்தான மந்திரி.

இத்தகைய பெருமை வாய்ந்த இந்த அரசியல் விற்பன்னர்களுக்குத் தலைவியாக விஜயலக்ஷ்மி செல்கின்றார் என்றால் வேறு என்னசொல்லவேண்டியிருக்கிறது!

ஐக்கியதேச ஸ்தாபனத்தில் தென் ஆபிரிக்காப பிரதமர் ஸ்மட்ஸ் படுதோல்வியடைவர் என்றும், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி, தம் பெயர்க்கேற்ப விஜயலக்ஷ்மியாகவேபாரதநாட்டுக்கு மீண்டு வருவர் என்றும் உலக அரசியல் விமரிசகர் ஜோசியம் கூறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

## இலங்கைத் தமிழர் கலாவிருத்திச்சங்கம் கோலாலம்பூர்

மேற்படி சங்க மண்டபத்தில் வியஞ புரட்டாதிமாசம் உ௰ந் திகதி (6-10-46) பிற்பகல் 5 மணிக்கு "என்செய்வோம்" என்னும் விஷயம்பற்றி 'கப்டின்' இ. வ. காளகண்டன் அவர்கள் ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்.

சிக்கன வாழ்வில் இலங்கை வாசிகள் ஆர்வம் குறைவதும், சமூகத்தொண்டு சங்கங்களில் உற்சாகம் குன்றுவதும் சிறுபிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி தாய்ப்பாஷையில் பயிலுவித்தலிற் சிரமம் குறைவதும், சிறுர்கள் சமயக்கல்வி பயிலாதிருப்பதும், இவைபோன்ற குறைகள் சமூகத்தின் அபிவிருத்திக்கு முரணாயிருக்கின்றன வென்று வற்புறுத்தினர். ஒவ்வொரு குடும்பமும் சொற்ப நிலத்தையாவது பண்படுத்த வேண்டுமென்றும் வாலிபர்கள் வியாபார ஸ்தலங்களை நடத்த முன் வரவேண்டுமென்றும் பேசினர்.

சபைத்தலைவர் திருவாளர் M. கனகசபை அவர்கள் சபையோருக்கு வந்தனம் கூறியபின் ஸ்ரீமதி ராஜேஸ்வரி அம்மாள் முக்கால்மணிநேரம் சங்கீதக் கச்சேரி செய்தார். —சடித.

## திருச்சி ரேடியோ

### புதன் அக் 23

காலை 7 பெரம்பலூர் என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 பெரம்பலூர் என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 சித்ரகானம் இசைத்கட்டு 8-30 ஆர் கே வைதேகி, கே ஆனந்தா பாட்டு 9 முடிவு.

12 ள்வ பன வாழ்வில் கதைப்பாட்டு 12-30 அபூர்வன் தீபாவளி இசழ் 12-45 ஸ்வயம்வர மண்டபத்தில் இசைநிகழ்ச்சி 1 மணிபலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில்செய்திகள் 2-05 மின்னிசை 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 ஆர்கே வைதேகி, கே ஆனந்தா பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சினிமா பாட்டுகள் 7.30 தமிழில்செய்திகள் 7.45 நபது பரால்ப்பெட்டி 8 தசாவூ எம் தியாகராஜன் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கீதம 9-20 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கில நிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் அக் 24

காலை 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ஏ பாஸ்கர குருப் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 குரல் இசை இசைத்கட்டு 8.30 எஸ் டி சரஸ்வதி வீணை 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ பாஸ்கர குருப் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 ஏ பாஸ்கர குருப் பாட்டு 2.15 கல்விஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 திருப்பாம்புரம் என் சிவசுப்பிரமணியபிள்ளை பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ் டி சரஸ்வதி வீணை 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சிதம்பரம் எஸ் ஜயராமபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ரத்தன் இசைத்கட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 திருப்பாம்புரம் என் சிவசுப்ரமணியபிள்ளை பாட்டு 10-30 முடிவு.

### வெள்ளி அக் 25

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பரூர் வி பொன்னம்மா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 எம் ஆர் கோபாலரெத்தினம் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் ஆர் கோபாலரத்தினம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எம் ஆர் கோபாலரெத்தினம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 திருவாவடுதுறை என் ஆர் நடராஜசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 5-40 குரான்-வரிப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள 6.10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள 7 டி சூரிய குமாரி இசைத்கட்டு 7.15 கிராமத்தி அமைக்கும் பிரச்னைகள்: பேச்சு 7.30 தமிழில்செய்திகள் 7-45 திருவாவடுதுறை என் ஆர் நடராஜசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 8-30 பரூர் வி பொன்னம்மா பாட்டு 9 ஆங்கிலத்தில செய்திகள் 9.15 டி எஸ் வெங்கடாசலபிள்ளை வயலின் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9.15 உலக விவகாரங்கள் ஆங்கிலம் 10 இசைவேளை 10-30 முடிவு.

## ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தாங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

### நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் சமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினுல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22 10 to 21-1-47

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, October, 22, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org